# உதயன்

விலை ரூபா 6-00

மலர்13 வள்ளுவர் ஆண்டு2029 ஆவணி 13வெள்ளிக்கிழமை (28-08-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 234


# யாழ்.பயணிகள் பிரச்சினை குறித்து திங்களன்று கொழும்பில் ஆராய்வு!

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவரும் கலந்து கொள்வார்

கொழும்பு, ஒகஸ்ட் 28

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதிலும் பயணிகள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் ஆராயப்பட உள்ளது.

புத்தசாசன, சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சர் லஷ்மன் ஜெயக்கொடி தலைமையிலான தொல்லை தவிர்ப்புக் குழு எதிர்வரும் திங்கட்கிழமை தனது வாராந்த கூட்டத்தை நடத்தும் போது இது குறிந்து விரிவாக ஆராய்ந்து யோசனை கண்டு தெரிவிக்க இருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவரும் இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இக்கூட்டத்துக்கு அதிகாரி ஒருவரை அனுப்பிவைக்குமாறு தொல்லை தவிர்ப்புக் குழு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதுகாப்பு அனுமதி கிடையாததால் கொழும்பில் பெரும் எண்ணிக்கையானோர் யாழ்ப்பாணம் வருவதற்கு வாரக்கணக்கில் தவம் கிடக்கிறார்கள்.

அதேபோன்று யாழ்ப்பா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைப்பில் 30 பேர் கைதாகினர்

கொழும்பு, ஒக. 28

கொட்டாஞ்சேனை மற்றும் கொம்பனித் தெரு பகுதிகளில் நேற்றுக் காலை முதல் பொலீஸாரும், இராணுவத்தினரும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

தேடுதலின்போது சுமார் 30 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-3-7)

## பாதாள உலக கும்பலுடன் பொலீஸார் துப்பாக்கி சமர்

### கொழும்பில் 8 பேர் கைது

கொழும்பு ஒக. 28

கொழும்பு மாளிகாவத்தையில் பாதாள உலகக் கும்பலுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரின் பின்னர் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணி அளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரிடமிருந்து பிஸ்ரல் ஒன்றையும் 6 துப்பாக்கி ரவைகளையும் பொலீஸார் மீட்டனர்.

சாதாரண உடையில் மாளிகாவத்தை வீதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)


சஞ்சீவிக்கு

ரணில் விக்கிரமசிங்க அளித்த பிரத்தியேகப் பேட்டி

நாளைய சஞ்சீவியில்


## கிழக்கில் தாக்குதல்

கிழக்கு மாகாணத்தில் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் விடுதலைப் புலிகள் நிலைகள் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று இடங்கள் மீது நேற்று தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சிலர் உயிரிழந்திருக்கலாம் என தெரிய வந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# திறந்த பல்கலைக்கழகத்தை சேர்ந்த 24தமிழ்மாணவர்கொழும்பில்கைது!

## டிக்மன்ஸ் வீதி துப்பாக்கிச் சூட்டை அடுத்து

கொழும்பு, ஒக. 28

கொழும்பு பம்பலப்பிட்டி டிக்மன்ஸ் வீதிச் சந்தியில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகத் திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 24 தமிழ் மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கிருலப்பனையில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டவர் திறந்த பல்கலைக்கழகத்தில் எலெக்ரோனிக் பொறியியல் கற்கைநெறியை மேற்கொள்பவர் என்று தெரிய வந்துள்ளதாகவும் —

இதனைத் தொடர்ந்தே திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 24 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலீஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸியில் குடியேற மேலும் கட்டுப்பாடு!

### ஆங்கில அறிவும் தேவை

கொழும்பு, ஒக. 28

வெளிநாட்டவர்களைக் குடியேற அனுமதிப்பது தொடர்பாக இது வரை காலமும் கடைப்பிடித்து வந்த விதிமுறைகளை ஆஸ்திரேலியா மேலும் இறுக்கமாகப் பின்பற்றப்போவதாக அறிவித்துள்ளது—

அடுத்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் குறித்து அடுத்தவாரம் அறிக்கை

கொழும்பு, ஒக. 28

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தாக்கப்பட்ட சம்பவம் குறித்த அறிக்கை அடுத்த வாரம் நீதிஅமைச்சுக்குசமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ தாக்கப்பட்ட போது சிறையில் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களின் வாக்கு மூலங்கள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருவதாகவும்—

மேற்படி சம்பவம் குறித்து விசாரணை நடத்தி பூரண அறிக்கை ஒன்றினைத் தமக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நஷ்டஈட்டு செய்தியில் உண்மை எதுவும் இல்லை

### ஜனாதிபதி செயலகம் மறுப்பு

கொழும்பு, ஒக, 28

முல்லைத் தீவுக் கடற்பரப்பில் கடந்த 15 ஆம் திகதி விமானப்படை விமானங்களால் குண்டு வீசி அழிக்கப்பட்ட பிரின்ஸஸ் காஷ் கப்பலில் பொருள்களை ஏற்றிய வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என ஜனா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்

## புளொட் அமைப்பு மீண்டும் போராடும்!

வவுனியா, ஒக. 28

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் புதிதாகக் கொண்டு வரப்பட்ட எரிபொருள் கட்டுப்பாட்டை அரசு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வாபஸ் பெறாவிட்டால்—

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என புளொட் இயக்கம் அறிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களுக்கு நிவாரணம் கிடைக்க உடன் ஏற்பாடு செய்க

## பிரதேச சபை கூட்டங்களில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 28

★ வன்னிப் பகுதியில்உள்ள மக்களுக்கு நிவாரணம்வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவும்.

★ வெளிநாட்டு அரசு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தம் செய்தல்.

★ செம்மணி புதைகுழி விவகாரம், காணாமற் போனோர் விவகாரம் ஆகியன சம்பந்தமான விசாரணைகளைத் துரிதப்படுத்தல்

மேற்கண்டவாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்கள் பிரதேச சபைக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வலி கிழக்கு, வலி தென்மேற்கு, வலிமேற்கு ஆகிய பிரதேச சபைகளின் முதலாவது கூட்டங்களிலேயே இத் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

வலிகிழக்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டம் பிரதேசசபை மண்டபத்தில் கடந்த திங்களன்று காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.

வலிதென்மேற்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டம் அதன் சபாமண்டபத்தில் கடந்த புதனன்று காலை 9 மணிக்கு நடைபெற்றது.

வலி மேற்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்றது.

இந்த மூன்று பிரதேச சபைகளின் முதலாவது கூட்டங்களிலேயே மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. (ஐ)


KANNA
TELECOMMUNICATION CENTRE
THUMPALAI, POINTPEDRO.
கண்ணா தொலைத்தொடர்பு சென்ரர்
தும்பளை, பருத்தித்துறை
உள்நாட்டு, வெளிநாட்டு
உடனடித் தொலைத் தொடர்புகளுக்கு
உள்நாட்டு· 070 – 212277
வெளிநாட்டு· 0094 – 070 212277
நேற்றைய பிரசுரத்தில் வெளிநாட்டு தொடர்பு இலக்கத்தில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்.
(58725)



HARCROS
AGROCHEMICALS
மன்னார், வவுனியா
மற்றும்
திருகோணமலை
ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை. விண்ணப்பிப்பவர்கள் தங்களிடமுள்ள வசதிகள் மற்றும் வங்கி வழங்கவுள்ள உத்தரவாதம் பற்றிய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
விற்பனை முகாமையாளர்
330, ரி. பி. ஜாயா மாவத்த
கொழும்பு - 10
(சி/4622)


# நினைவஞ்சலி





அமரர்
**கதிரவேலு விஜயசிங்கம்**
(உரிமையாளர், கலாசோடாக் கம்பனி)
மலர்வு: 05 - 06 - 1931
உதிர்வு: 19 - 08 - 1996

திருமதி
**நாகேஸ்வரி விஜயசிங்கம்**
மலர்வு: 15 - 06 - 1940
உதிர்வு: 15 - 11 - 1989

பாசமும் பரிவுடனும் கனிவுற மக்களோடும்
ஒட்டிய உறவில் வாழ்ந்து உலகினில் புகழ் சமைத்து
மட்டிலாப் பெருமை தந்த எங்கள் இதய விளக்கே!
என்றென்றும் உம்தம் நினைவுடன்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

166/3, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
(58715)

# பாடசாலை இன்று முதல் மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 28

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் இன்று முதல் பழைய இடத்தில் இயங்கவுள்ளது.

இது தொடர்பான சம்பிரதாய வைபவம் வித்தியாலய அதிபர் கு. கணேசலிங்கம் தலைமையில் இன்று முற்பகல் 10-30 மணியளவில் இடம்பெறும்.

இந்த வைபவத்தில் கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். இது வரை கடற்படையினரின் பாவிப்பில் இப்பாடசாலைக் கட்டடங்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மகளிர் அபிவிருத்தி நிலையம்
ஆரம்பிக்கும் பெண்களுக்கான

## 'இலவச சட்ட உதவி'

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றத்துடனான இணைந்த சேவை.

பராமரிப்பு, மணப்பதிவு நீக்கம், மகவேற்பு, சீதனம், குடும்ப பிரச்சினைகள், வன்முறைகள், இளைஞர்/யுவதிகளுக்கான ஆலோசனைகள்/ சட்ட நடவடிக்கைகள்.

♣ சட்டத்தரணி:–
திருமதி சரோஜினி இளங்கோவன்

♣ நேரம்:–
சனி 8 30 11–30
புதன் 3-00 5-30
திங்கள் 1-00 3-00

ஆரம்பம்:– 02 09 98

பணிப்பாளர்:
மகளிர் அபிவிருத்தி நிலையம்
07, இரட்டணம் லேன்,
கே. கே. எஸ். ரோட்,
வண்ணார் பண்ணை.
(58717)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## கனகசபை தங்கப்பிள்ளை

பன்னாலையைப் பிறப்பிடமாக கொண்டவரும் தற்பொழுது 130, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தியில் வசித்தவருமாகிய திருமதி கனகசபை தங்கப் பிள்ளை 27—08—98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து கனகசபை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாலரத்தினம் (முன்னாள் கணக்காளர், Browun& Co), திருமதி சிவபாக்கியம் திருநாவுக்கரசு, டாக்டர் திருமதி சிவபாதநாயகி கனகசபை (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி சி. சறோஜினிதேவி, க. திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற அதிபர்), ச. கனகசபை (ஓய்வுபெற்ற பொறியியலாளர், விரிவுரையாளர்) ஆகியோரின் மாமியாரும் டாக்டர் ராம் மனோகரி (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்). திருமதி சர்வலக்ஷ்மி, சகுந்தலாதேவி, சிறிஸ்கந்தராசா டாக்டர் திருமதி கு. உதயராணி (கனடா), க. உதயகுமார் (பொறியியலாளர்), அகிலகுமார் (தொழில் நுட்பவியலாளர்), செந்தில்குமார் (பொறியியலாளர்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி சின்னாச்சிப்பிள்ளை காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் திருமதி சுதிராசிபபிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-08-98) வெள்ளிக்கிழமை 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
டாக்டர் திருமதி சிவபாதநாயகி
கனகசபை
(மகள்)
(58727)

## சுப்பாபிள்ளை இராமையா

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், 127/1, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பாபிள்ளை இராமையா 27-08-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திலகேஸ்வரி, ஆனந்தலிங்கம், இராஜேஸ்வரி, யோகநாதன், மதிவதனி, சதானந்தன், சிவனேஸ்வரி, அம்பிகை, அம்பாலிகை, ரதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ் சென்றவர்களாகிய கந்தசாமி, இராசரத்தினம் ஆகியோரினதும் சரஸா, புவனாம்பிகை (தேவி), சிவசுப்பிரமணியம், நளாயினி, கனகசுந்தரம், விஜயநாதன், இரவீந்திரன், கனகசபை ஆகியோரினதும் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 28-08-98 அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரதி கனகசபை
(மகள்)

127/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(58707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொக்கர்பி விமானக் குண்டு வெடிப்பு:

# சந்தேக நபர்களை நெதர்லாந்தில் விசாரிக்க லிபியா இணங்கியது!

திரிப்போலி, ஓகஸ்ட் 28

லொக்கர்பி விமானக் குண்டு வெடிப்பின் சூத்திர தாரிகள் இருவரை மூன்றாவது நாட்டில் விசாரிப்பதற்கு லிபியா இணங்கியுள்ளது.

இந்த விசாரணையை நெதர்லாந்தில் நடத்த லிபிய வெளி விவகார அமைச்சு புதனன்று இணக்கம் தெரிவித்தது.

வடக்கு ஆபிரிக்க நாடான லிபியாமீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடனேயே லிபியா இந்த இணக்கத்தைத் தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இழுபறிப்பட்டு வரும் இந்த விவகாரத்துக்கு இதன் மூலம் தீர்வு ஏற்படலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

முன்னதாக சந்தேக நபர்களை மூன்றாவது நாடு ஒன்றில் விசாரிக்க அமெரிக்காவும், பிரிட்டனும் இணங்கிருந்தமை தெரிந்ததே.

இதனை அடுத்தே திரிப்போலி தனது நிலைப்பாட்டை வெளியிட்டிருக்கிறது.

1988 ஆம் ஆண்டு 'பாம் ஏ எம் 103' விமானம் பிரிட்டனில் இருந்து அமெரிக்காவுக்குப் பறந்து கொண்டிருந்த போது ஸ்கொட்லாந்தின் லொக்கர்பீ என்னும் இடத்துக்கு மேலே விமானம் குண்டு வெடித்துச் சிதறியது. அதிலிருந்த 189 அமெரிக்கர்கள் உட்பட 259 பட்டணிகளும் உயிரிழந்தனர்.

### குண்டுப் புரளி

சிங்கப்பூரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகத் தொலைபேசி மூலம்விடுக்கப்பட்ட மிரட்டலை அடுத்து அக்கட்டடத்தில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

**உலக அரங்கில்**

## கின்ஸாசா அருகே நடைபெற்றசண்டை:

# 200 - க்கு மேற்பட்ட மக்கள் துட்ஸிகளால் படுகொலை

கின்ஸாசா ஓக. 28

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சண்டையில் ஈடுபட்டுள்ள துட்ஸி இனக் கிளர்ச்சிப் படைகள் தலைநகருக்கு அருகே மிக நெருக்கமாக முன்னேறி இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

லோறன் கபீலாவின் அரச படைகளுக்கும், கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே கின்ஸாசாவுக்கு அருகேசண்டை நடப்பதை சுயாதீன வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

இதே வேளை—

தலைநகரை நோக்கி முன்னேறும் வழியில் 200- க்கும் மேற்பட்ட அரச ஆதரவாளர்களை கிளர்ச்சிப் படையினர் கொன்றுள்ளதாகச் கத்தோலிக்க செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ)


# கேள்வி அறிவித்தல்

## கல்வித்திணைக்களம்-யாழ்ப்பாணம்-வலயம் 01, 02

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் வலயம் 01 கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1998 ஆம் ஆண்டு 9ஆம் மாதம் 18ஆந்திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும், அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்கலாம்.

| பாடசாலைப் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|
| 1. யா/பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் உயர் பாடசாலை பாடசாலைக் கட்டடம், அலுவலகத் தொகுதித் திருத்தம். ICTAD பதிவு M 09 உம் அதற்கு மேற்பட்டதும். | 500. 00 | 17,900.00 |
| 2. யா/காட்டுப்புலம் அ. த. க. பா. 20'x20' அலுவலகத்துடன் 80'x20' பாடசாலைக் கட்டடம் அமைத்தல் ICTAD பதிவு M 09 உம் அதற்கு மேற்பட்ட தும். | 500. 00 | 18,800. 00 |
| 3. யா/ஆனைக்கோட்டை றோ. க. த. க. பா பாடசாலைக் கட்டடம் 60'x25' இருமாடியில் கீழ்த்தளம் மாத்திரம். ICTAD பதிவு M 09 உம் அதற்கு மேற்பட்டதும். | 500. 00 | 17,750. 00 |
| 4. யா/நவக்கிரி அ. மி. த. க. பா 150'x20' பாடசாலைக் கட்டடத்தின் மிகுதி வேலை ICTAD பதிவு M 08 உம் அதற்குமேற்பட்டதும். | 500. 00 | 21,250. 00 |
| 5. யா/வடமராட்சி இந்து மகளிர் உயர் பாடசாலை பாடசாலைக் கட்டடத் திருத்தம் ICTAD பதிவு M 08 உம்அதற்கு மேற்பட்டதும் | 500. 00 | 23,300. 00 |

1. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் தரம் M 09 ஆம் M 08 ஆம் அதற்கு மேற்பட்ட கரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

2. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 01 இன் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 98—08—31 ஆம் திகதியிலிருந்து 98—09—04 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை கல்வித்திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையிற் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிற் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர் கேள்விச் சபை, கல்வித் திணைக்களம் வலயம் 01 யாழ்ப்பாணம்'' என விலாசமிடப்பட்டு மேற்படி திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 1998—09—18 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத் தருகின்றோம்.

சி: சிவராஜா
கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயம் 02

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
கல்வித்திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1998—08—26

(G/ 4668)


# 'வயக்ரா' பாவித்த 69 அமெரிக்கர் பலி!

வாஷிங்டன், ஓக. 28

'வயக்ரா' எனப்படும் பாலியல ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யும் மாத்திரையைப் பயன்படுத்திய அமெரிக்கர்களில் 69 பேர் கடந்த 4 மாதகாலப் பகுதியில் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாத்திரையை உட்கொண்ட பின்னர் பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் அல்லது அதன் பின்னர் இவர்கள் மரணமடைந்ததாக உணவு, மருந்து தொடர்பான மருத்துவ ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மாத்திரை உலக சந்தைகளில் மிக வேகமாக இடம் பிடித்து விற்பனையாகி வருகிறது. (ஐ)

# வெட்டுக்கிளிகளை ஒழிக்க கோழிகளுக்குப் பயிற்சி!

## சீனாவில் ஏற்பாடு

பெய்ஜிங், ஓக. 28

வெட்டுக் கிளிகளுடன் போராடி அவற்றை அழித்தொழிப்பதற்காக 10 ஆயிரம் கோழிகளுக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வடமேற்கு மாநிலமான ஸின்ஜியாங்கில் உள்ள கோழிகளுக்கே இப்பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

பயிர்களை அழிக்கும் வெட்டுக் கிளிகளை ஒழிக்க சீனா வகுத்துள்ள புதிய திட்டம் இதுவாகும்.

கோழிக் குஞ்சுகள் பொரித்தவுடன் 60 நாள்கள் கொண்ட இந்த 'இராணுவப் பயிற்சிக்கு' உட்படுத்தப்படும் என்று சீனாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான 'சின்குவா' தெரிவித்தது.

ஸின்ஜியாங் மாகாணம் கடந்த 10 ஆண்டுகாலமாக வெட்டுக்கிளிகளால் பாதிக்கப்பட்டு வருகிறது. (ஐ)


# மூன்றாம் ஆண்டு... நினைவுத்துளிகள்

## வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி
(பீட்டர்)
(இளைப்பாறிய இ. போ. ச ஊழியர்

நீங்கள் எப்பொழுதும் நினைத்துக் கொள்ள
பிரயத்தனம் பண்ணுவேன் 11 பே. 1: 15

அன்னை மடியில்: 05 - 06 - 1921
ஆண்டவரிடத்தில் 28 - 08 1995

கர்த்தருக்குள் கடந்து சென்றோர்
களிகூரும் பிதா வீட்டில் - காத்திருக்கும்
தந்தையுமைக் காண்போமென நினைத்து
கண்ணீரைக் காணிக்கையாய் - கர்த்தருக்கே
படைக்கின்றோம் அல்லேலூயா.
நினைவுகூரும் ........

அன்பு மனைவி சகோதரி
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தகவல்: எஸ்.மகேசன்
சுவிஷேசகர்,
திருநெல்வேலி.

[58703]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### SPOKEN ENGLISH

வகுப்பில 10 மாணவர்கள் மட்டும் அனுமதித்து இலக்கணம் இன்றி சுலபமாக தனித்தனி கவனம் கொடுத்து ஆங்கிலப் பயிற்சி. புதிய பிரிவு 01-09-98 10 A M. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(58701)

### தவறிவிட்டது

சிவநாதன் உஷாநந்தனி ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல. 736722313V) யாழ்ப்பல்கலைக்கழக அடையாள அட்டையும் அடங்கிய கைப்பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனம் (J. T. I), 15/9, யாழ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(58698)

### மணமகன் தேவை

35 வயது மம நட்சத்திர ஆசிரியைக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். சாதகப் பிரதியுடன் கொடர்பு கொள்ளவும்: 774 C/O உதயன், யாழ்ப்பாணம்.
(58706)

### இசை வகுப்புகள்

ஓகன், மெலோடிகா வாத்திய இசைப் பயிற்சிகள் ஆரம்பம்: 29 - 08 - 98 சனிக்கிழமை மாலை 2-30 மணி. 123, ஸ்ரேசனடி, யாழ்ப்பாணம்.
(58669)

## மதகுகள் சேதம்

பருத்தித்துறை, ஓக. 28
பருத்தித்துறை - தம்ப செட்டி வீதியிலுள்ள இரண்டு மதகுகள் உடைந்துள்ளதால் வாய்க்கால் வழியாக வரும் வெள்ள நீர் வீதியின் மேலால் பாய்வதனால் வீதி சேதமடைந்து வருகிறது.
(ஐ-118)

## நூலக எரிப்பு வாரம்

பருத்தித்துறை ஓக. 28
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் நூல்நிலையம் எரிக்கப்பட்ட சம்பவத்தை நினைவு கூரும் நூல்நிலைய எரிப்பு வாரம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் இளைப்பாறிய அதிபர் திரு. நடராசா உரையாற்றுவார். இவ்வாரத்தில் கல்லூரி மாணவர்களைக் கொண்டு நூல்கள் சேகரிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என கல்லூரி அதிபர் பொ. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.
(ஐ-118)

## சாரதாதேவி ஆலய கும்பாபிஷேகம்

பருத்தித்துறை, ஓக. 28
பருத்தித்துறை தாய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஆலய கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பங்குபற்ற இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் உபதலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகானந்தர் மகராஜ், இராமகிருஷ்ண ஆச்சிரமத்தின் செயலாளர் தவத்திரு விருபாக்ஷானந்தா, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி அஜாராத்மானந்த தாஜி மகராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ஐ-118-173)

---

உ

# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் 28 - 08 - 1998 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 06 - 09 - 1998 ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

**விசேட உற்சவங்கள்**

கொடியேற்றம் 28 - 08 - 1998 வெள்ளி
முற்பகல் 10-30 மணி
தண்டாயுதபாணி உற்சவம் 03 - 09 - 1998 வியாழன்
பிற்பகல் 2-00 மணி
சப்பறத் திருவிழா 04 - 09 - 1998 வெள்ளி
மாலை 6-00 மணி
தேர்த்திருவிழா 05 - 09 - 1998 சனி
காலை 9-30 மணி
தீர்த்த உற்சவம் 06 - 09 - 1998 ஞாயிறு
காலை 9-30 மணி
பூங்காவனம் 07 - 09 - 1998 திங்கள்
மாலை 4-00 மணி
அலங்கார உற்சவம் 08 - 09 - 1998 செவ்வாய்
மாலை 4-00 மணி

ஆலய சேவையில்
நிர்வாக சபை

விளம்பர அன்பளிப்பு:

**சண்முகன் தொலைத் தொடர்பு நிலையம்**
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி இணைப்புக்களை தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
தொலைபேசி இல.
உள்நாடு — 070 - 212236
வெளிநாடு — 0094 - 70 - 212236
(58702)

---

# கண்ணீர் அஞ்சலி

செல்வி
**நாகேந்திரராஜா நிசாலினி**

25 - 08 - 98 அன்று அகால மரணமடைந்த எமது பாடசாலை உயர்தர வகுப்பு மாணவி நிசாலினிக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
விஞ்ஞான மன்றத்தினர்.

யா/ மெதடிஸ்த பெண்கள்,
உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை. (58704)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி ஜோ மாணிக்கம்**
(B. A. சிறப்பு)

அன்னாரின் வாழ்வுக்காக நன்றி செலுத்தும் செபக் கூட்டமும், மதிய போசனமும் எமது இல்லத்தில் 29—08—1998 சனிக்கிழமையன்று பகல் 11 30 மணியளவில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவியவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
திருமதி மேரி இராசாத்தி மாணிக்கம்,
பிள்ளைகள்.

சந்திரன் இல்லம்,
பண்டத்தரிப்பு. (ப/2669)

---

# தவறிவிட்டது

சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோயிலடி
திருமதி பவளராணி நவரத்தினம்
ஆகிய எனது 505040015V இலக்கம் கொண்ட தே. அ. அட்டையும், வி. அ. அட்டையும் சுன்னாகம் கந்தரோடை வீதி, ஐயனார்கோயில் விளக்கடிக்கும், சுன்னாகம் ஸ்ரேசன்றோட், சிறி கடைக்கும் இடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர் சிறிகடையில் ஒப்படைக்கவும்.
(58711)

---

உ

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு
# ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோயில்
[காளி கோயில்]
# மகோற்சவ விஞ்ஞாபனம் 1998

28-08-98 வெள்ளிக்கிழமை
கொடியேற்றம் மு. ப. 10-30 மணி
04-09-98 வெள்ளிக்கிழமை
சப்பறத் திருவிழா மாலை 5 00 மணி
05-09-98 சனிக்கிழமை
தேர்த்திருவிழா காலை 9-00 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளல்
06-09-98 ஞாயிற்றுக்கிழமை
தீர்த்தத் திருவிழா மு. ப. 10-45 மணி
07-09-98 திங்கட்கிழமை
பூங்காவனத் திருவிழா மாலை 4-00 மணி

நேரம் பழைய நேரம். கால நேரத்தைப் பொறுத்து பூசை நேரத்தில் மாற்றம் செய்யப்படும்.

ஆலய பரிபாலன சபையினரும்,
உபயகாரர்களும்.
(58713)

---

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
**முத்தாட்சி கோபாலபிள்ளை**
(புலோப்பளை கிழக்கு, பளை)

எமது சக உத்தியோகத்தர்
**திரு. கோ. சேதுகாவலரின்**

அன்புத் தாயார் திருமதி முத்தாட்சி கோபாலபிள்ளை 26 - 08 98 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவினால் வாடும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறோம்.


முகாமையாளர்களும், சகஊழியர்களும்,
இலங்கை வங்கி இரண்டாம் கிளை
யாழ்ப்பாணம்.

[58710]

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 — 12 — 1981



உதிர்வு 27 — 05 — 1998

செல்வன்
**மகேந்திரன் கோகுலராஜ்**
(நெல்லியடி ம. ம. வி. 2000 கணித மாணவன்)

திதி: 28 - 08 - 98

கோகுலனின் இறுதிக்கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். 28-08-98 காலை அன்னாரின் இல்லத்தில் நிகழும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

- மகேந்திரன் குடும்பத்தினர்

மூத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய், கரவெட்டி. (58709)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்பல்கள் வடக்கே வர அனுமதி;

# 'கிரிந்த' காங்கேசன்துறை வந்தது!

கொழும்பு, ஒக. 28

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் ''பிரின்ஸஸ் காஷ்'' கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட பின்னர் வடக்குக்கான பொருள்களை ஏற்றிக்கொண்டு 'கிரிந்த' என்ற கப்பல் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்துள்ளது.

பொருள்கள் ஏற்றிய நிலையில் பல நாள்களாக கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற இந்தக் கப்பல் வடக்கே செல்ல அனுமதி கிடைத்த பின்னர் அங்கு சென்று பொருள் இறக்கும் பணியை நேற்று முன்தினம் ஆரம்பித்தது.

மற்றும் சில கப்பல்கள் இவ்வாரத்துக்குள் வடக்கே வரவுள்ளன.

(ஐ-9)

## கோவிலாக்கண்டி மீனவர்கள் பாதிப்பு

நாவற்குழி கோவிலாக்கண்டி கடற்பரப்பில் வள்ளங்களில் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படாததால் இப்பகுதியில் உள்ள 181 குடும்பங்களைச் சேர்ந்த மீனவர்கள் வருமானமின்றி சஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி மீனவர்கள் கடற்கரையில் உள்ள பாதுகாப்பு அரணில் தமது அடையாள அட்டைகளைக் கொடுத்து விட்டு சுமார் 500 மீற்றர் தூரம்வரை நடந்து சென்று மீன்பிடிப்பதாகவும் இக்கடற்பரப்பில் பாஷையூர், குருநகர்ப் பகுதிகளிலிருந்து வள்ளங்களில் வரும் மீனவர்கள் மீன்பிடிப்பதால் தமக்கு குறைந்த அளவே வருமானம் கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

(ஐ-117)

## மதகு திறப்பு

குருநகர், ஒக. 28

நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியில் சேதமடைந்திருந்த மதகு யாழ். மாநகர சபையின் வேலைப் பகுதியினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் யாழ். மாநகர சபை முதல்வரான பொ. சிவபாலன் மதகு ஊடான போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார்.

இவ் வைபவத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் பி. பாலசிங்கம் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ-51)

### கப்பல் தகர்ப்பு:

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபா 22 லட்சம் இழப்பு!

யாழ்ப்பாணம், ஒக. 28

'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் குண்டு வீசி அழிக்கப்பட்டதனால் கூட்டுறவுச் சங்கங்கள் 22 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை இழந்து விட்டதாக யாழ். அரச அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இக்கப்பலில் பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு 14 லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களும், யாழ். புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 8 லட்சம் ரூபா பெறுமதியான நூல் மற்றும் உபகரணங்களும் எடுத்து வரப்பட்டன.

மேற்படி கப்பல் அழிக்கப்பட்டதால் இப்பொருள்களும் அழிந்து விட்டதாகவும் இப்பொருள்களுக்கான நட்டஈட்டைப் பெற்றுத் தருமாறும் மேற்படி சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(ஐ-5)

## புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

வலி. தென்மேற்கு, ஒக. 28

வலிகாமம் மேற்கு சங்கானை புதிய பிரதேச செயலக கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் இடம்பெற்றது.

சங்கானை வாழ் பொது மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரூபா 5 லட்சம் பெறுமதியான நிதிமூலம் வாங்கப்பட்ட காணியிலேயே புதியபிரதேச செயலகம் அமைக்கப்பட்டுவருகிறது.

யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராகவும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகன் பிரதமவிருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

அடிக்கல் நாட்டு விழாவில் வலி. மேற்கு பிரதேச செயலக ஊழியர்களும், பொது மக்களும் பங்கு பற்றி சிறப்பித்தனர்.

(ஐ-185)

## இரண்டாவது நடமாடும் பிரதேச செயலக சேவை

### விக்டோரியாக் கல்லூரியில்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள அடையாள அட்டை வழங்கும் இரண்டாவது நடமாடும் பிரதேச செயலகசேவை தொல்புரம், பண்ணாகம், பனிப்புலம், சுழிபுரம், பொன்னாலை, மூளாய் ஆகிய பகுதி மக்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட இருப்பதனால் அன்றைய தினம் அடையாள அட்டைகள் பெற்றுக் கொள்ளாத அல்லது அவை தொடர்பான பிரச்சினைகள் இருக்கும் சகலரும் இந்த நடமாடும் செயலக சேவையில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கா. சந்திரராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடையாள அட்டைகளுக்குரிய புகைப்படங்களைக் குறைந்த கட்டணத்தில் பிடிப்பதற்குரிய ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

(ஐ - 175)

## வீதி சேதம்

நவாலி, ஒக. 28

வடலியடைப்பு கலைவாணி வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமையினால் பாரிய கிடங்குகளுடன் குண்டும் குழிகளுமாக உள்ளது.

இதனால் வாகனங்கள், பாதசாரிகள் போக்குவரத்துச் செய்ய முடியாது பெரிதும் கஷ்டப்படவேண்டி உள்ளது.

(ஐ-100)

## மூலப்பொருள், மின்வசதி இன்மையால் புடைவை நெசவு உற்பத்தி வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக. 28

மூலப் பொருள் மற்றும் மின்சார வசதிகள் இல்லாமையினால் யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க உற்பத்திப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆறு கோடி ரூபா முதலீட்டுடன் ஆரம்பித்த சங்க உற்பத்திப் பணிகள் மேற்குறித்த காரணங்களினால் இயங்க முடியாத நிலையிருப்பதால் பல தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிலையேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் சிறப்பாக இயங்கிய இந்த சங்கத்தின் உற்பத்திப் பணிகள் இடப்பெயர்வை அடுத்து தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன.

மக்கள் மீளக்குடியேறத் தொடங்கிய பின்னர் சிறிய அளவில் இயங்கி வருகின்ற போதும் மூலப்பொருள்கள் மற்றும் மின்சார வசதிகளின்மையால் தொடர்ந்து செயற்பட முடியாத நிலையில் இச்சங்க உற்பத்தி நிலையம் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

(ஐ-5)

## லங்கா சமசமாஜக் கட்சி அரசிலிருந்து வெளியேறும்

கொழும்பு, ஒக. 28

லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேற விரும்புவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் பின்போடப்பட்டது குறித்தும் —

நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது குறித்தும்—

லங்கா சமசமாஜக் கட்சி அதிருப்தி கொண்டுள்ளது என வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார் என ஏ.எப்.பி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-9)

### ஒப்பந்தம் காலாவதி

## 'மேர்க்ஸ் ஹண்டி' கப்பல் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை கப்பற் கட்டணமின்றி ஏற்றி வரும் பணியில் ஈடுபட்ட 'மேர்க்ஸ் ஹண்டி' கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பல் கம்பனியுடனான ஒப்பந்தம் முடிவடைந்து விட்டதாலே இக் கப்பல்சேவை நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கட்டணமின்றி பொருள்களை ஏற்றிவருவதற்கான இந்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இக் கப்பலை தற்பொழுது யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்துவோர் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை எடுத்துச்செல்வதற்கு வாடகைக்குஅமர்த்தவுள்ளது.

கூட்டுறவு அமைப்புகளுக்கான பொருள்களை ஏற்றி வரும் பொருட்டே இக் கப்பல் சமாசத்தினால் வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளதாகவும், இக்கப்பலில் இடவசதி இருந்தால் தனியாரின் பொருள்களும் ஏற்றிவரப்படும் என்றும்சமாசதலைவர் சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

(ஐ-5)

## மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இதில் மத்தியஸ்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

(உ)


உ

31 ஆம் நாள்

நினைவஞ்சலி

28 – 08 – 1998

அன்னை மடியில் 21 – 04 – 1933



இறைவன் அடியில் 29 – 07 – 1998

அமரர்

கனகசபை சுப்பிரமணியம்

(இ. போ. ச. நடத்துநர்)

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் நேசமதாய் நெஞ்சமதில் வாழ்ந்த எம் அப்பாவே......!

நீங்கள் இங்கே வாழும் காலங்கள் உங்களுக்கு வளமாக வாய்த்திருந்தது. என்றும் எம் இதயத்திலும் நிலைத்திருந்தீர்கள். உங்கள் கன்மவினை முற்றப் பெற்றதனாற் போலும், கொடிய காலன் உங்கள் உயிரைக் கவர்ந்து சென்றானே......! கொடுமையிலும் கொடுமை இதனிலும் கொடுமை வேறுண்டா......? விதியை வெலல யாரால் முடியும்? விதி இவ்வாறு இருக்க நாம் வருந்தி ஆவதென்ன?

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிபபது போலும் பிறப்பு

நமக்கும் அவ்வழியே என்ற உணர்வோடு, உங்கள் ஆன்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு; சடுதியில் ஏற்பட்ட பிரிவுத்துயரில் நாம் சிக்கித் தவித்திருக்கையில் — ஆறாத் துயரடைந்த வேளையில் வந்து ஆறுதல் கூறி, நம் துன்பதுயரங்களில் பங்கு பற்றிய அயலவர், உற்றார், உறவினர், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி, அஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் — 31 ஆம் நாள் நிகழ்வுகள் இன்று 28-08-1998 வெள்ளிக்கிழமை சங்குவேலியில் மருமகன் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு மனமாரக் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(58641)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும் 31-ம் நாள் நிகழ்வுக்கான அழைப்பும்



தோற்றம் 08 — 12 — 1940

மறைவு 30 — 07 — 1998

திருமதி

**தவமணிதேவி மகாதேவன்**

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ? தேறுதல்
சொல்ல தெய்வம் வந்தென்ன அம்மா உன்
திருமுகம் பார்த்தால் போதாதோ— எம்
உள்ளங்கள் துடித்திட நீ எங்கு சென்றாய்?
எந்நேரமும் உன் நினைவால்
கண்ணீரால் கரைகின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வுகளில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

29-08-1998 சனிக்கிழமை எமதில்லத்தில் நிகழும் 31-ம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள். மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

643, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (58372)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 30 - 07 - 98 வியாழனன்று
சிவபதமடைந்த

திருமதி

**பூரணம் அம்பலவாணர்**

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளும், பிரார்த்தனையும் நாளை 29 - 08 - 98 சனிக்கிழமையன்று காலை 10-30 மணியளவில் அமரரின் இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அ. கந்தசாமி (A. K. B ட்ரான்ஸ்போட்)
அ. நவரத்தினம்,
அ. சற்குணநாதன்
(செல்வன்ஸ் டீசல் என்ஜினியர்ஸ் கோப்பாய்)
அ. செல்வரத்தினம்
(ஸ்ரீவிஷ்ணு அசோசியேட்ஸ் கொழும்பு)

''செல்வா வாசா''
நாவற்கட்டை ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு. (58591)

## மன்னிப்புச் சபை கவலை

கொழும்பு, ஓக. 28

செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் உண்டு என்ற தகவலை வெளியிட்ட கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் முதலாவது குற்றவாளியான சோமரட்ண ராஜபக்ஷ சிறை அதிகாரிகளால் தாக்கப்பட்டது தொடர்பாகவும்—

அவரது பாதுகாப்புத் தொடர்பாகவும்— சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

(இ-6)

## ஜெனரேட்டர் பழுது

அரியாலை, ஓக. 28

பாலையூர், ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டப் பகுதிக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

ஜெனரேற்றரில் ஏற்பட்ட கோளாறினால் மின் விநியோகம் தடைப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

## வெள்ளவாய்க்கால் திருத்தப்படவில்லை

நவாலி, ஓக. 28

ஆனைக்கோட்டை மக்கிக் கிடங்கடியிலிருந்து நவாலி சங்கையான் வீதி, வண்ணா வளவு, சின்னப்பா வீதி ஊடாகச் செல்லும் பிரதான வெள்ள வாய்க்கால்கள் நீண்ட காலமாகத் திருத்தப் படவில்லை.

மருவமழை ஆரம்பமானால் மானிப்பாய்ப் பிரதேசப் பகுதியிலிருந்து வரும் வெள்ளம் இந்த வாய்க்கால்கள் ஊடாகவே வயல்களைச் சென்றடைகின்றது. தற்போது இவ்வாய்க்கால்கள் திருத்தப்படாமல் குப்பை மேடாகக் காட்சியளிப்பதால் எதிர்காலத்தில் வெள்ளம் ஓட முடியாமல் குடிமனைகளுக்குள் புகுந்து மக்கள் இடம் பெயர வேண்டிய அபாய நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-100)

## பட்டப்பகலில் திருட்டுக்கள்

வலிகாமம் மேற்கு, ஓக, 28

வட்டுக்கோட்டைப் பகுதியில் பட்டப்பகலிலும் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வட்டுக்கோட்டை, சிவன் கோவிலடி, கலைநகர் ஆகிய இடங்களிலுள்ள பெரும்பாலான வீடுகளில் மக்கள் இல்லை. இடம்பெயர்ந்து சென்ற மக்கள் இன்றுவரை வீடுகளுக்குத் திரும்பவில்லை. இதனால் இவர்களின் வீடுகளிலுள்ள வீட்டுப்பாவனைப் பொருள்கள், தளபாடங்கள் முதலியன ஏற்கனவே களவாடப்பட்டு விட்டன. தற்போது பகலில் திருடர்கள் இந்த வீடுகளின் ஓடுகளைக்கூட சுழற்றிக் கொண்டு செல்கின்றனர். வீடுகளிலுள்ள சிமெந்துக் கற்கள் கூட திருடப்படுகின்றன.

(ஐ-175)

## பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை – தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(58453)

## இடமாற்றம்

புதிய சிந்தியா நகைமாடமாக இயங்கிய
ஸ்தாபனம் தற்பொழுது
57K, கன்னாதிட்டிச் சந்தியில்


**புதிய கீர்த்தனா**

நகை மாடமாக இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு தெரிவிக்கின்றோம்.

- உரிமையாளர்

(58699)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 — 08 — 1944

விண்ணில் 08 — 09 — 1997

**சபாபதிப்பிள்ளை குகதாசன்**

(ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர்,
இ. போ. ச., பருத்தித்துறை)

திதி: 28 - 08 - 98

எங்கள் அன்புத் தெய்வமே! பாசமிகு தந்தையே!
பண்பின் உறைவிடமே நாமிருக்க எங்கு சென்றீர்?
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு ஆனாலும்
அப்பா என்று யாரை நாமழைப்போம்?
வருடம் ஒன்று சென்றதப்பா எம் கவலை
தீரவில்லை.
ஆண்டு பல சென்றாலும் ஆறுமோ எமது துயர்
தனிமையில் எங்கு அப்பா நிற்கிறீர்கள்?
நாங்கள் இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போம்?

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

பத்தமேனி,
அச்சுவேலி. (58666)

## 100th BIRTH ANNIVERSARY AND 10th YEAR OF DEATH OF



**Mrs. PONNAMMA ARULAMPALAM**

Fondly Remembered By:

Daughters: Ramani Nadarajah,
Ranee Selvarajah.

And Grandchildren: Dushyandan & Janey.

Professor (Mrs) N. Selvarajah,
57, Arasady Road, Jaffna. (58587)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குற்றச்சாட்டும் படலம்!

தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் சமாதான வழியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதி அளித்தே சந்திரிகா குமாரதுங்க பதவிக்கு வந்தார். அவர் ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்களும் கழித்து விட்டன.

பொதுத்தேர்தல் நடந்து முடிந்தது மே நூலிழை அரசாங்கம் ஒன்றையே அமைக்க முடியும் என்பது ஜனாதிபதிக்கு மட்டுமல்ல நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். அதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பு இல்லாமல் சாத்தியமற்றது என்பதும் இயல்பாகவே தெரிந்த விடயம்.

கடந்த நான்கு ஆண்டுகளிலும் ஐ. தே. கட்சியின் ஒத்துழைப்பை அரசாங்கத்தினால் பெறமுடியவில்லை. அதே வேளை ஐ தே. கட்சியும் தனக்குள்ள பலத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் கண்ணாமூச்சி விளையாட்டு ஆடி வருகிறது

இத்தகைய சூழ்நிலையில் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றன்மீது மற்றது குற்றஞ்சாட்டி வருகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் ஆளும்தரப்பிற்கு உண்மையான அக்கறை இருந்திருப்பின், நாடாளுமன்றத்தில் தமக்குள்ள நூலிழை நிலையை உணர்ந்து, எதிர்க்கட்சியை அனுசரித்தும், அரவணைத்தும் சென்றிருக்க வேண்டும்.

அவ்வாறுசெய்யின் தென் இலங்கையில் தத்தமது வாக்கு வங்கிகள் வற்றிவிடுமேயென்ற அச்சம் இருதரப்பினரிடமும் உண்டு. அதனாலேயே பிரிட்டிஷ் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லிம்பொக்ஸ் முகதாவில் செய்யப்பட்ட கனவான் ஒப்பந்தத்தை இரு தரப்பாரும் மதித்து நடக்காமல் — ஒத்துழைத்துச் செயற்படாமல் சுமார் இரண்டு வருடங்களைக் கழித்து விட்டனர். இங்கும் அரசாங்கத் தரப்பின் அக்கறையீனம் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அவ்வாறு செயற்படாது இருந்துவிட்டு ஐ தே.கட்சி தம்முடன் ஒத்துழைக்கவில்லை என்று ஆளும் கட்சி இப்போது கூறுவதில் அர்த்தம் உள்ளதாகக் கொள்ள முடியவில்லை.

எவ்வாறெனினும், சமாதான வழியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தமக்கு ஆர்வம் உண்டு என்று ஆளும்தரப்பார் கூறுவது பொருத்தமற்றதாகும்; ஏற்றுக்கொள்ளத்தக்கதும் அல்ல. அநுராதபுரத்தில் ஜனாதிபதி நிகழ்த்திய உரை அதனையே ஊர்ஜிதம் செய்கிறது.

போரின் கடைசிக் கட்டத்தை அடைந்து விட்டதாகவும். விரைவில் அதனைப் பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்றும் தெளிவுபடக் கூறும் ஜனாதிபதிக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் ஆர்வம் தொடர்வதாக எவ்வாறு கருத முடியும்;

## 'கற்பகம்' கட்டடத்தில் பொலீஸார் தேடுதல்!

கொழும்பு, ஓக. 28

பம்பலப்பிட்டி டிக்ஸ்மன் வீதிச் சந்தியில் கடந்த செவ்வாய் மாலை இராணுவக் கப்டன் ஒருவர் சுடப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பொலீஸார் பம்பலப்பிட்டியில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் கற்பகக் கட்டடத்தில் தேடுதல் மேற்கொண்டனர்.

கடந்த செவ்வாய் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இத்தேடுதலின்போது கற்பகம் உணவகத்தில் பணிபுரியும் 14 தமிழர்களையும், அக்கட்டடத்தில் மேல்மாடியில் தங்கியிருந்த மேற்படி சபையின் ஊழியர்கள் நால்வரையும் பொலீஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈ.பி.ஆர். எல், எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஈடுபட்டிருந்தார்.

(ஐ-3)

## தச்சன் தோப்பு வீதி திருத்தப்படும்

பருத்தித்துறை, ஓக. 28

கரவெட்டி தச்சன்தோப்பு வீதி ஒன்றரை லட்சம் ரூபா செலவில்கரவெட்டிப்பிரதேச சபையினரால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இவ் வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகச் செப்பனிடப்படாதிருந்தது.

(ஐ-118)

## புத்தூர் பாடசாலை புனரமைப்பு

பருத்தித்துறை, ஓக் 28

புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையை உடனடியாக புனரமைப்புச் செய்ய ஐந்து இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அகதிகளுக்கான ஐ. நா. தூதரக உதவியுடன் பாடசாலையைப் புனரமைப்பதற்காக இந்த மதிப்பீடு செய்யப்பட்டது.

இதன் புனரமைப்பு வேலைகளை விரைவில் செய்வதற்கு கோப்பாய் பிரதேச செயலர் எஸ். கேதீஸ்வரன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

(ஐ-118)

## பட்டதாரி பயிலுநருக்கு சேவை முன்பயிற்சி

பருத்தித்துறை, ஓக. 28

கடந்த மாதம் நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சேவை முன் பயிற்சி வகுப்புக்கள் அடுத்த மாதம் 23 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி வகுப்பு திருஇருதயக்கல்லூரியிலும்—

வலிகாமம் பகுதியில் கடமை புரியும் பட்டதாரி பயிலுநர்களுக்கான சேவை முன் பயிற்சி வகுப்புக்கள் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும் என யாழ்.வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் இதுவரை நியமனத்தைப் பொறுப்பேற்காதவர்கள் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கடமையைப் பொறுப்பேற்று இச் சேவை முன்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தனி கடிதங்கள் கிடைக்கப்பெறாத புதிய பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களும் இச் சேவை முன் பயிற்சி வகுப்பில் தமது நியமனக் கடிதத்தைக் காட்டிப் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-118)

## ஓய்வூதியர் விவரம் திரட்டும் படிவங்கள் தென்மராட்சிக்கு

தென்மராட்சி, ஓக. 28

கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்தினால அனுப்பப்பட்ட ஓய்வூதியம் பெறுவோரின் விவரததிரட்டு படிவங்கள் தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவுக்கு வந்துள்ளன.

இப் படிவங்கள் செப்ரெம்பர் மாத ஓய்வூதிய வவுச்சருடன் அந்தந்த ஓய்வூதியர்களுக்கு இரு பிரதிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும், படிவங்களை ஓய்வூதியர்கள் பூர்த்தி செய்து தத்தமது பிரிவு கிராம அலுவலர் அல்லது அரச கூட்டுத்தாபன நிறுவனங்களின் பதவி நிலை அதிகாரி அல்லது ஓய்வூதியம் பெறும் வங்கியின் முகாமையாளர் முன்னிலையில் ஒப்பமிட்டு அந்த அதிகாரியினால் சிபார்சு செய்யப்பட்ட பின்னர் சாவகச்சேரியில் உள்ள பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவில் ஓய்வூதியர்கள் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும் என ஓய்வூதியப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்தினால நாட்டில் உள்ள அனைத்து ஓய்வூதியர்களின் விவரங்களையும் திரட்டும் நோக்குடன் பிரதேச செயலகங்கள் ஊடாக ஓய்வூதியர்களின் விவரங்கள் திரட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.(ஐ-117)

## மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 28

சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்த ஜன்னல் சரிந்து அருகில் விளையாடிக் கொண்டிருந்த மாணவன் மீது விழுந்ததில் அவர் தலையில் காயமடைந்தார்.

கொக்குவில் இராமகிருஷ்ணர் வித்தியாலயத்தில நேற்று இடம்பெற்ற சம்பவத்தில் வித்தியாலய மூன்றாம் ஆண்டு மாணவனான ராசகுமார் (வயது 9) என்ற சிறுவனே தலையின் பின் பக்கத்திலும்,நெற்றியிலும் காயமடைந்தார், காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## தொலைபேசி இயங்கவில்லை

பருத்தித்துறை, ஓக.28

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் அமைக்கப்பட்ட நாணயக்குற்றி மூலம் இயங்கிய தொலைபேசி கடந்த இரு வாரகாலமாக பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் கஸ்டமுறுகின்றனர்.

(ஐ-118)

## இலவசக் கல்வி

கொழும்புத்துறை, ஓக. 28

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தினரால் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரையும் உள்ள மாணவர்களுக்கு இலவசக்கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

பல மாணவர்கள் இவ் இலவசகல்வி வகுப்பில் பங்குபற்றி வருகின்றனர்.

(ஐ-30)

## கிணறு அமைக்க நிதியுதவி

கொழும்புத்துறை, ஓக. 28

நீர்வேலி வடக்கு மாசிவன் இந்து மயானத்திற்கு புதிதாகக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு சனசமூக நிலைய உப சமாசத்தின் முயற்சியினால் இது அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

## அரிசி - சீனி விநியோகம்

கொழும்புத்துறை, ஓக. 28

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்துவ கிளைச்சங்கங்கள் மூலம் ''உ'' அட்டை வைத்திருப்போருக்கு 28 ரூபாப்படி 3 கிலோ சீனியும் கட்டுப்பாட்டு விலையில் வழங்கி வருகிறது.

(ஐ-30)

### ஞானக் கதிர்

## சைவத்தை நிலைபெறச் செய்பவை தெய்வீகத் திருமுறைப் பாடல்களே

என்றும் சைவத்தையும், சைவர்களையும் பாதுகாப்பது தெய்வீகத்திருமுறைகளே ஆகும். அவற்றைத் தினசரி நாம் பாராயணம் செய்வதனால் நம் மனதுக்குச் சாந்தியும் பேரின்பமும் உண்டாகும்.

அதனை மனனஞ் செய்து இராகத்துடன் மட்டும் பாடுவது போதாது. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லி அவற்றிலுள்ள உபதேசங்களை ஊன்றிப்படித்து உணர்ந்து அவற்றைப் பின்பற்றி ஒழுகுவது இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் பயன் செய்யும்.

உதாரணமாக ஐந்தெழுத்து மந்திரத்தின் பயன்களைப் பற்றி தேவார திருவாசகங்களும், திருமந்திரமும் நமக்கு இடித்துக் கூறுகின்றன. ''வேண்டுதல் வேண்டாம் அடிவேண்டி இன்புற்றிட எடுத்த தேகம் விழுமுன்னே சேரவாரும் ஜெகத்தீரே'' என இரந்து கூவி அழைக்கின்றன.

''கற்றுணை பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்றும், ''குலமிலாராயிரனும் குலத்துக்கேற்றதோர் நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே'' என்றும்இன்னும் நம் அருளாளர்கள் கூறியுள்ளனர். ''நாவேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்'' என்கிறது திருவாசகம்.

ஆனாலும்நம்மில்எத்தனை பேர் இந்தத் தெய்வீக மந்திரத்தில் உள்ளபடி உண்மையில் நம்பிக்கை கொண்டு அதைத்துணையாகக் கொள்கின்றோம். நாம் முன்னர் செய்த புண்ணியத்தின் பயனாக சைவர்களாகப் பிறந்தும் கூட சைவசமய குரவர்கள் கூறியுள்ள நன்னெறியாய நல்ல உபதேசங்களை பின்பற்றாமல் சைவர்கள் என்று சொல்லிக் கொண்டு வாழ்கின்றோம். எமக்கு எவ்வாறு இன்பம் சுரக்கும்? துன்பம்தீரும்?

''சிறிதளவாவது மனைவி, தாய், தந்தை,மக்கள், மற்றுமுள்ள சுற்றமெனும் வினையுளே விழுந்து அழுந்தி வேதனைக்கு இடமாகாதே களையுமா கடல்சூழ் நாகை மன்னுகாரோணத்தானை நினையுமாவல்லீராதில் உய்யலாம்'' என்கிறார் அப்பர் சுவாமிகள். பொக்கம் மிகப்பேசி நம்மில்பலரும் வீணே பொழுதைக்கழிக்கின்றோம்; நமக்குத்துக்கம் தீரும் வகையைச் சொல்கின்றார் வாகீசப் பெருந்தகையார்.

திருமுறைகள் கூறும் நல்லுபதேச வழிகளைப் போற்றி அதன்படி நாமும் உணர்ந்து நடப்போமாயின் யாம் சைவர்களாகப் பிறந்ததின் பிறவிப் பயனைப் பெற்று நமக்குவரும் பற்பல வாழ்க்கைப் பிரச்சினைகள் நல்லபடி தீர்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். இது இறைவன் திருவாக்கு. அவ்விதம் நாம் எல்லோரும் வாழ்ந்து நடக்கத் திருவருள், குருவருள் இரண்டும் நமக்கு துணை செய்யுமாக.

''இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்'' என்ற நாவலர் வாக்கையும், அவர் வழி வந்த நல்லோரையும் நம் வாழ்நாள் பூராவும் வழுத்தி இறையனுபவத்தில் இன்பம் பெற்று தன்னில் தன்னைக் கண்டு கொண்டு வீண் பேராசையைச் சுருக்கி மீண்டும் கருப்பையூர் வராதிருக்க முயற்சித்தல் ஆறு அறிவு படைத்தோர்க்கு நீங்காக் கடமையும், தகைமையும் ஆகும்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என எம் சாத்திரங்களையும் தோத்திரங்களையும் உள்ளபடி உணர்ந்து கொண்டால் நம் சித்தாந்த சைவம் உச்சியிற் பழுத்த சிறந்த தீங்கனி என்பது தெளிவாகும்.

சூழ்ச்சி நிறைந்த உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே திருமுறையமுதத்தினைத் தெவிட்டாது அருந்தி நம் தீவினையை அழித்து மீட்டிங்கு வினைப் பிறவி சாராது வாழ முயற்சிப் போமாக தெய்வத் திருமுறைகளைப் படித்து பயன் பெறுவோமாக.

க. சிவசங்கரநாதன்

★

## நாளை

ஆவணி - 13

சனிக்கிழமை

திதி: ஸப்தமி

முன்இரவு 07.10 வரை.

நட்சத்திரம்: விசாகம்

பிற்பகல் 02 21 வரை.

சுபநேரம்: 03 05 - 04 35

ராகுகாலம்: 09:05 - 10.35

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

ஆடம்பர உல்லாச வாழ்க்கையினால் அடிக்கடி வைத்தியர்களின் உதவி தேவைப்படும்.

—பிளேட்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தருக்கு யாழ்ப்பாணத்தில் கோயில்!

## அருத்தமாதம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக சுவாமி விவேகானந்தருக்கு திருவுருவச் சிலையும், திருக்கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன.

1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததை நினைவு கூர்ந்து திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இக்கோயிலும், சிலையும் அமைக்கப்பட்டன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் செங்கல்பட்டு இராமகிருஷ்ண மிசன் மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி விருபக்ஷானந்தாஜி மகராஜீயினால் உருவச்சிலையும், கோயிலும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் இலங்கை இராமகிருஷ்ண மிசன் கிளைகளின் உபதலைவர் ஸ்ரீமத்சுவாமி ஆத்மகணானந்தாஜீ மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசனைச் சேர்ந்த ஸ்ரீமத்சுவாமி அஜராத்மானந்தாஜீ ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வுக்கு வருகை தரும் சுவாமிகள் அனைவரும் கல்வியங்காடு சந்தியில் இருந்து ஆடியபாதம் வீதி ஊடாக திருநெல்வேலி இராமகிருஷ்ண நிலையத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்கள்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து ஹோமம், பூசை, பஜனை என்பன வருகை தரும் சுவாமிகளால் நடத்தப்படவுள்ளன.

(ஐ-ரீ)

## ஒய்வூதிய மாற்றங்கள் குறித்த பயிற்சிப்பட்டறை

### நுகேகொடையில்

நவாலி, ஓக. 28

ஓய்வூதியக் கொடுப்பனவு முறையில் ஏற்படுத்தப்படவிருக்கும் புதிய மாற்றங்கள் பற்றிய பயிற்சிப் பட்டறை நுகேகொடை பிரதேசசெயலகத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் இரு தினங்களுக்கு நடைபெறவுள்ளதாக ஓய்வூதியப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச, மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்களில் இருந்தும் கணக்கு நிர்வாக உத்தியோகத்தர், விடய எழுதுநர் உட்பட தலா மூவர் இப் பயிற்சியில் பங்குபற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் பங்குபற்றுபவர்களுக்கு மதிய உணவு உட்பட நாளாந்தம் 200 ரூபா— வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் பங்குபற்றுபவர்களின் விவரங்கள் 1.9.98 க்கு முன்பதாக பக்ஸ் மூலம் யாழ். அரச அதிபர் அனுப்பவுள்ளார். எனவே சகலரும் தமது விவரங்களை 31.8 98-க்கு முன்னர் யழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

(ஐ-100)

## கைப்பணி பயிற்சி நிலையம்

வடமராட்சி, ஓக. 28

கொடிகாமம் கச்சாய் வீதியில் இலங்கை பனை அபிவிருத்திச் சபையால் அகதிகளுக்கான ஐ. கா. தூதரக உதவியுடன் பனம் கைப்பணிப்பயிற்சி நிலையம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் 30 யுவதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. பயிற்சியாளர்களுக்கள்க்கு மாதம் ஒன்றுக்கு தலா 750 ரூபா அலவன்ஸாக வழங்கப்படும்.

(ஐ-173)

## ச.ச. நிலைய கட்டட திறப்பு விழா

வடமராட்சி, ஓக. 28

ஈவினை மத்தி கற்பக விநாயகர் சனசமூக நிலைய புதிய கட்டடத்திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் இ. அரிகரன் தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் முதன்மை விருந்தினராகவும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். ஈவினை கற்பக விநாயகர் கோவில் குரு சிவஸ்ரீ தி. கெங்காதரக்குருக்கள் ஈவினை மெதடிஸ்த திருச்சபைக் குருவானவர் வண. ஜே. டபிள்யூ. யோகராசா ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

இவ் விழாவில் சி. பொ. ஐயாத்துரை, செ. செல்வரத்தினம் ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள். (ஐ-173)

## சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 28

தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அரியாலைப்பகுதி இராணுவ முகாம் ஒன்றில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சேனரட்ண (வயது 24) என்ற சிப்பாயே காயமடைந்தவராவார். (ஐ-15)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில்புதிதாகச் சேரவிரும்புபவர்களையும் தற்போது மத்தியஸ்தர்களாக உள்ளவர்களையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புக்கு சமுகமளிக்கும்படி யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

(ஐ-15)

# கலைஞன் தனக்குப் பின் ஒருவருக்கு கலையை அர்ப்பணிக்க வேண்டும்

## மாதாந்த இசைவிழாவில் உரை

பாரம்பரியமான நாதஸ்வர, தவில் கலைகளை அழியாது பாதுகாக்க அர்ப்பணிப்பு அவசியமானது. ஒவ்வொரு கலைஞனும் தனக்குப்பின் ஒரு கலைஞனை உருவாக்கி அவனுக்கு கலையை அர்ப்பணிக்க வேண்டும். அப்போதுதான் வாழையடி வாழையாக இக் கலைகள் வளர்ச்சியடைய முடியும்.

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சமயம் அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற மொழிப்பெயர்ப்பாளர் செல்லப்பா நடராசா இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தலைவர் எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் இந்த இசை நிகழ்வு நடைபெற்றது.

செல்லப்பாநடராசாதனது உரையில் மேலும் கூறியதாவது:—

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நாதஸ்வர தவில் கலைகள்பால் மக்களுக்குப் பெரும் ஈடுபாடு உண்டு. வருடத்தில் 6 மாதங்களை இந்த இசைகளை ரசிப்பதற்காக மக்கள் ஒதுக்கி விடுகிறார்கள், முன்பெல்லாம் 6 மாதங்களும் விடிய விடிய நடக்கும் திருவிழாக்களை நித்திரை விழித்திருந்துமக்கள் ரசிப்பார்கள். இன்று நிலைமை மாறிவிட்டாலும் மக்களின் ரசிப்புக் குறையவில்லை. இக்கலைகளை அழிய விடாது பாதுகாக்க எல்லோரும் பயில வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அது சாத்தியமா? என்பது தெரியவில்லை. பரம்பரையான குலத் தொழிலாக அதனைக் கற்கும்போதுதான் அதற்குப் பெருமையும், சிறப்பும், முன்னேற்றமும் இருக்க முடியுமென நான் கருதுகிறேன். அந்த வழியில் இக் கலைகளை வளர்க்க நாம் ஆவன செய்ய வேண்டும்— என்றார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த எஸ். ஆர். ஞானசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:—

கர்நாடகஇசையை வளர்ப்பதில் இசை வேளாளர் சங்கம் ஆற்றும் பணி மகத்தானது. இக்கர்நாடக இசைக்கு சரியானதொரு வடிவமைப்புக்கொடுக்கப்படவேண்டும். இந்த இசை குறித்த சரியான வரையறை ஏற்படாதிருப்பதால் குழப்ப நிலையும், அபிப்பிராய பேதங்களும் ஏற்படுகின்றன. ஆகவே இசை விற்பன்னர்கள். இசை அறிஞர்கள், கலைஞர்கள் பங்கு பற்றும் ஆய்வரங்கு ஒன்றை எமது சங்கம் ஏற்பாடு செய்ய உள்ளது. அதன் மூலம் கர்நாடக இசையை ஒழுங்கமைத்து பேணி வளர்க்க சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்— என்றார்.

இந்த இசை நிகழ்வில் முருகானந்தம் பிரேமானந்த் குழுவினரின் மங்கள இசையும், இசைஞானவாருதி எம். ஸ்ரீரங்கநாதனின் கர்நாடக இசைக் கச்சேரியும் இடம் பெற்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

வலி. தென்மேற்கு, ஓக. 28

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோயில் கும்பாபிஷேக மலர் வெளியீடு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நூல் ஆய்வுரையையும், சிறப்புரையை சி. சபாநாதனும் ஆற்றினர். (ஐ-185)

## கூ. சங்கத்துக்கு மோ. சைக்கிள்

அரியாலை, ஓக. 28

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. (ஐ-17)

## வைத்திய அதிகாரி கடமையேற்பு

நெல்லியடி, ஓக. 28

கடந்த ஒன்றரை மாத காலம் ஊர்காவற்றுறை அரசினர் மருத்துவமனையில் பதில் கடமையாற்றி வந்த, மந்திகை மருத்துவமனையைச் சேர்ந்த உதவி வைத்திய அதிகாரியான டாக்டர் வி. சிவராஜா, மீண்டும் மந்திகை மருத்துவமனையில் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (ஐ-109-173)

## ஆஞ்சநேயர் சிலை

வலி. தென்மேற்கு, ஓக. 28

சங்கரத்தை - கரந்தை பிளவத்தை முருகமூர்த்தி ஆலயத்திற்கு இந்தியாவில் இருந்து ஆஞ்சநேயர் சிலை தருவிக்கப்பட்டுள்ளது.

பழைமை வாய்ந்த இந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு ஆஞ்சநேயர் சிலையை பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-185)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

பருத்தித்துறை, ஓக. 28

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் கல்லூரியில் அமைக்கப்பட்ட புதிய இரண்டு மாடிக் கட்டடம் அடுத்த மாத முற்பகுதியில் பாடசாலை அதிபரிடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது. இம் மாடிக் கட்டடம் ரூபா 55 இலட்சம் செலவில் ஜேர்மன் தொண்டு நிறுவனமான ஜீ. ரி. சற் நிறுவன நிதியில் அமைக்கப்பட்டது. இக் கட்டடம் திறக்கப்பட்டதும் இக் கல்லூரியின் இட நெருக்கடி ஓரளவு தீரும் என பாடசாலை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-118)

## கலை விழா

பருத்தித்துறை, ஓக. 28

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கான கலைவிழா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் அடுத்தமாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இரு அமர்வுகளாக நடைபெறும். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மண்டபத்தில் காலை 9.00 மணிக்கும், பிற்பகல் 1.00 மணிக்கும் விழா நடைபெறும்.

(ஐ-118)

## கீர்த்தன மாலை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 28

சங்கீத பூஷணம், சைவ சித்தாந்த பண்டிதர் ஏ. கே. ஏரம்பமூர்த்தியின் ஆக்கத்தில் உருவான ''கீர்த்தன மாலை'' நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் அ. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வித்துவான் வே. ஆறுமுகம் நூலினை வெளியிட்டு வைப்பார். பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரையையும், மஹா வித்துவான் ந. வீரமணி ஐயர் ஆய்வுரையையும் நிகழ்த்துவர். (ஐ-ரீ)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

நல்லூர் மகோற்சவ காலத்தில் நல்லூர் சைவ மகா சபையின் ஆதரவில் நடைபெற்ற 'கம்பராமாயணம்' தொடர் இசைச் சொற்பொழிவை நிகழ்த்திய கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவையும், ஏனைய கலைஞர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பூங்காவனத்திருவிழாவன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் கலந்து கொண்டார்.

(ஐ-8)

## மயானத்தில் கொட்டகை

யாழ்ப்பாணம், ஓக. 28

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையினர் மழைகாலத்தில் பிணங்களை எரிப்போரின் நன்மை கருதி மயானத்தின் தெற்குப் பக்கத்தில் புதிய கொட்டகை ஒன்றை அமைத்துள்ளனர்.

மழைகாலம் தவிர்ந்த ஏனைய நாள்களில் இக் கொட்டகையை பாவிக்க வேண்டாம் என பாவனையாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-8)

## கமநல சேவை நிலையத்துக்கு நியமனம்

பருத்தித்துறை, ஓக. 28

புலோலி கமநல சேவை நிலையத்தின் புதிய தலைவராக கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கமநல சேவை ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் 15பேர் கொண்ட இயக்குநர் சபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

(ஐ-118-173)

## நிதி ஒதுக்கீடு

திருநெல்வேலி, ஓக. 28

நல்லூர் பிரதேச சபை பகுதியிலுள்ள கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்திற்கு புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை—

நல்லூர் வடக்கு விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு மைதானத்திலுள்ள மண் அணையை அகற்றுவதற்கு 20 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

# வவுனியா வரும் அகதிகள் உணவின்றிக் கஷ்டம்

## நோயாளருக்கு பனடோல் கூட இல்லை

கொழும்பு, ஓக. 27

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளில் இருந்து வவுனியா வந்து சேர்ந்துள்ள அகதிகள் உணவின்றி மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து ஜினசேன ரத்துக்கமகே பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது —

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வவுனியா வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்குவதை அடுத்து சுமார் 800 பேர் வரை வவுனியா வந்தனர்.

உயிலங்குளம் மற்றும் மடுப் பகுதியில் இருந்து வந்த மக்கள் வவுனியா வருகின்றார்கள் என அதிகாரிகளுக்கு முன்னரே தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அதிகாரிகள் இந்த அகதிகளை வரவேற்கத் தயார் நிலையில் இருக்கவில்லை என தெளிவாக தெரிகிறது.

இந்த மக்கள் இது குறித்து கருத்து வெளியிட்ட போது, தமக்கு மட்டுமன்றி சுகவீனமுற்ற நிலையிலுள்ளவர்களுக்கு பனடோல் கூட வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

அகதிகளின் தேவைக்காக நாள் ஒன்றுக்கு 50 ரூபா வீதம் அரசு நிதி ஒதுக்கியுள்ள போதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அகதிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சாட்டிக் கொண்டு தப்பித்து வருகின்றார்கள்.

இவ்வாறு அவர் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார். (இ-9-10)

## விளையாட்டு கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சம்மேளனம் நடத்தி வரும் விளையாட்டு சட்ட விதிகள் தொடர்பான கருத்தரங்குத் தொடரில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த—இவ்வார இறுதிக்கான — கருத்தரங்கு நடைபெறமாட்டாது என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இக்கருத்தரங்குத் தொடர்கள் அடுத்த வார இறுதியில் வழமை போல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-6)


### வைர விழா
### ஆலோசனைக் கூட்டம்

அளவையூர்

**சங்கீத பூஷணம் திரு. வி. கே. நடராஜா**

அவர்களின் இசைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக எடுக்கப்பெறும் வைர விழா தொடர்பான கூட்டம் 29 - 08 - 1998 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும். அவரது சிஷ்யர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள், பெரியோர்கள் யாவரும் கூட்டத்தில் கலந்து ஆதரவு நல்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பிரமஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக்குருக்கள்
(தலைவர்)
கும்பழாவளை, அளவெட்டி.

கே. எஸ். சிவஞானராஜா
செயலர்
வைர விழாக் குழு,
மாதா கோவியடி, உடுவில்.

(58721)



### இதயபூர்வமான நன்றிகள்

எமது தந்தையார்
நியாயசிரோமணி பிரம்மஸ்ரீ
**கி. சுப்பிரமணியசாஸ்திரிகள்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டதும் எம்மோடு துயரத்தில் பங்குகொண்டு அனுதாபம் தெரிவித்த அந்தனப் பெரியோர்கள், தேவஸ்தானத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள், அபிமானிகள், அயலவர்கள். அவரது மாணவர்கள், அரச, தனியார் நிறுவனத்தினர்கள் ஆகியோருக்கும், அபரக்கிரியை நிகழ்வுகளில் கலந்துகொண்டு உதவி புரிந்தவர்கள், பத்திரிகை, பிரசுரங்கள் மூலம் தம் உணர்வுகளை வெளிப்படுத்தியவர்கள் மற்றும் பலவழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது வணக்கத்தையும், இதயபூர்வமாள நன்றிகளையும் பணிவன்புடன் தெரிவித்துககொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்.

33, கடைச்சாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(58724)



உ

ஆத்திசூடி
அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
கந்தர்மடம்

### பதினைந்தாம் நாள்
### இறுதி அலங்கார உற்சவம்

இன்று காலை ஒன்பது மணிக்கு கலச சங்காபிஷேகம் நடைபெற்று பகல் பன்னிரண்டு மணிக்கு மகேசுர பூசை நடைபெறும் மாலை 2 மணிக்கு விநாயகப் பெருமானை திருவூஞ்சலில் வைத்து பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும மாலை 4 மணிக்கு விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி தெருவுலாவாக வீதிவலம் வந்து ஆலயத்தை வந்தடைவார்.

அடியார்கள் விநாயகப் பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

— ஆலய பரிபாலனசபை

(58718)



### ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று முதல்
குதூகல ஆரம்பம்
விஜயகாந்த் - ப்ரிதா
மனோரமா நடித்த
தர்மா
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4672)



### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
இன்று
ரஜனி, மீனா
சரத்பாபு செந்தில்
நடித்த
**முத்து**
10-30 — 2-00 — 5-00
( புதிய நேரம் )
(சி/4671)



### நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்
கார்த்திக் - கௌசல்யா
கவுண்டமணி- செந்தில்
நடித்த
பொன்னுமணி
இனிய பாடல்கள்
நிறைந்த படம்
திரைப்படக் கூட்டுத்தாபன ( ரீல்ஸ் ) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58716)



### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

எமது தியேட்டரில் திரை, ஒலி அமைப்பு மிக உன்னதமான நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இன்று முதல்
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா நடித்த
எங்க ஊர் ராஜா
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(58486)


## சமய சந்நிதிகளில்

நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்தமஹோற்சவம் இன்று வெள்ளி பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும். அடுத்தமாதம் 5 ஆம் திகதி இரதோற்சவமும் மறு நாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (ஐ-100)

* * *

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆவணித் திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

வல்லை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஐ-8)

★ ★ ★

பருத்தித்துறை புலோலி மேற்கு ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் மஹாகும்பாபிஷேக தின மஹா சங்காபிஷேகம் (1008) எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. முதல் நாள் புதன்கிழமை பிற்பகல் சங்குஸ்தாபன பூசையுடன் ஆரம்பமாகி மறுநாள் பிற்பகல் மணவாளக் கோலத் திருவிழாவுடன் நிறைவு பெறும். (ஐ-118)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விக்ன விநாயகர் (சம்பந்தப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். அடுத்த மாதம் 5ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-100)

★ ★ ★

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்வதான அலங்கார உற்சவ பூர்த்தி விழா இன்றுவெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும், அதைத் தொடர்ந்து அழகிய பூத்தண்டிகையில் சுவாமி வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

பளை இரட்டைக்கேணி அம்பாள் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் அடுத்தமாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

உசன் கந்தசுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து உற்சவங்களை நடத்தி வருகிறார். (ஐ-173)

## பஸ்ஸிலிருந்து விழுந்து காயம்

பஸ்ஸில் இருந்து இறங்கும் போது தவறிவிழுந்து ஒருவர் காயமடைந்தார்.

பலாலியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த ஆறுமுகம் தையல்நாயகி (வயது 70) என்ற பெண்ணே காயமடைந்தவராவார்.

கொழும்பில் இருந்து விமான மூலம் பலாலிக்கு வந்த இவர் விமானநிலையத்தில் இருந்து, பஸ்ஸில் வந்து பொதிகளை எடுக்கும் இடத்தில், பொதிகளை எடுப்பதற்காக அவசரமாக இறங்கிய வேளையே விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-139-15)


பொருளியல்
S. வரதராஜன்
**A/L 99**
சனி, ஞாயிறு
10 — 11 வினா - விடை
12 — 1
வரவு செலவுத் திட்டம்
2 — 3 பணமும்வங்கியும்
**A/L 2000**
புதிய பிரிவு: 11-00மணி
ஆரம்பம்:
29 - 08 - 98
**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(58720)



### ஸ்ரீ செல்வா

சினிமா
ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
தினசரி: 10-30, 2-30
( பழைய நேரம் )
விஜய் - சுவலட்சுமி
ரகுவரன் நடித்த
நிலாவே வா
(நேரடி CD பிரதி)
(58723)



சுன்னாகம் கிழக்கு [ஊரிசாட்டி]

### திருப்பதியுறை சிவபூதவராயர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விழா

கொடியேற்றம்: 28 - 8 - 1998 வெள்ளி
காலை 10 30 மணி
தேர்த்திருவிழா: 05 - 09 - 1998 சனி
காலை 10: 35 மணி
தீர்த்தத்திருவிழா: 06 - 09 - 1998 ஞாயிறு
காலை 10. 00 மணி
சொற்பொழிவு தினமும் மாலை 6. 00 மணி

மகோற்சவ குரு:
கல்வயல் சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
(ஆசிரியர், குருசாமி வித்தி. கைதடி)

— மகோற்சவ உபயகாரர்கள்.

(சி/4675)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்எண்ணெய் விநியோகத்துக்கும் வவுனியாவில் கட்டுப்பாடு வரும்

கொழும்பு, ஓக. 28

வவுனியா மாவட்டத்தில் டீசல், பெற்றோல் ஆகியவற் றுக்கு உள்ள விநியோகக் கட் டுப்பாட்டை மண் எண் ணெய்க்கும் விஸ்தரிக்க பாது காப்பு அமைச்சு தீர்மானித் திருப்பதாகத் தெரிய வரு கிறது.

இத்திட்டத்தின் படி வவு னியாமாவட்டத்தில்மண்எண் ணெய் விநியோகத்துக் கென கூப்பன் முறை ஒன்றை அறி முகம் செய்வதெனவும்—

வவுனியா மாவட்ட அர சாங்க அதிபர் மூலம் இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதெனவும்— பாது காப்பு அமைச்சில் தீர்மா னிக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு வவுனியா வில் இருந்து எரிபொருள் கடத்தப்படுவதாகக் கூறியே வவுனியாவில் எரிபொருள் விநியோகத்தைக்கட்டுப்படுத் தும் நடைமுறை அமுல் செய் யப்பட்டு வருகிறது. (இ-7)

# முல்லை அரச அலுவலகம் 16ஆம் நாளாக ஸ்தம்பிதம்

## மறியல் போர் நீடிப்பு

வவுனியா, ஓக. 28

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் அரைவாசியாகக் குறைக்கப்பட்டதைக் கண் டித்து முல்லைத்தீவு அரச செயலகத்தின் முன்னால் 16ஆவது நாளாக நேற்றும் மக்கள் மறியல் போராட்டம் நடத்தி னார்கள் என்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியாவுக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை 500க்கும்மேற் பட்ட பெண்கள் செயலகத்தின் முன் மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மறியல் போராட்டத்தால் புதுக்குடியிருப்பில் இருக்கும் முல்லைத்தீவு அரச செயலகம் 16 ஆவது நாளாக செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் சென்றுள்ள புரட்டஸ்தாந்து திருச்சபை அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று மக்களைச் சந்தித்து அவர் களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

றெஜி ஜெயநேசன் தலைமையிலான இக்குழுவில் 7 திருச்சபை மதக் குழுக்களைச் சேர்ந்த சிங்கள, தமிழ், பறங்கி இனப்பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். (இ-6)

## ஆஸியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து இந்த விதி முறைகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப் படும்.

1999ஜூலைக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவில் குடியேற விண்ணப்பிப்போர் சிறந்த ஆங்கில அறிவைப் பெற்றிருக்க வேண்டுமெனவும், ஆஸ்திரேலியாவில் அங்கீகரிக்கப்படும். தொழில் சார்பான தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் தொழில் புரிய வருபவர்கள் 45 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருப்பதோடு, தமது விண் ணப்பப் படிவத்தோடு பிணைப்பணமாக 2 ஆயிரத்து 250 அமெரிக்க டொலர்களைச் செலுத்த வேண்டும் என்றும்—

குடும்பத் தலைவரில் தங்கியிருக்கும் மனைவி, பிள்ளை கள் ஒவ்வொருவரின் பெயரிலும் மேலும் ஆயிரத்து 125 அமெரிக்க டொலர் செலுத்தப்படல் வேண்டும் எனவும் ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. [இ-7]

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை வவுனியா நகரில் மட்டுமே இந்த எரி பொருள் கட்டுப்பாடு நடை முறைப்படுத்தப் படுவதாக வும்—

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும்வவுனியா வின் ஏனைய பகுதிகளில் கூடிய விலையில் தாராளமாக எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக் கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6-164-7)


உடன் விற்பனைக்கு

பிறிமா கைலைன், பிறவுன் கைலைன், வெள்ளை ஒரு நாள் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

"மல்லிகாபதி"
சந்தை முன் ஒழுங்கை,
மானிப்பாய். (சி/4674)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

Lectures by: Mr. M.A. HARI

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான விசேட பிரிவு ஆரம்பம்.

02-09-1998 புதன் மாலை 3-00 மணி

Wednesday
Monday ]- 3-00 p.m -- 4-00 p.m

== Director

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (58675)


# லயன்ஸ் கழக வலயம்-3 தலைவர் வருகை

யாழ்ப்பாணம், ஓக. 28

லயன்ஸ் மாவட்டம் 306பி பிராந்தியம் 8 இன் வலயம் 3 இன் தலைவர் லயன் எஸ். ஞானராஜா தமது துணைவி யாருடன் உத்தியோக பூர்வ விஜய மொன்றை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3-30மணிக்குநல்லூர்லயன்ஸ் கழகத்துக்கு மேற் கொள்ள வுள்ளார்.

இவரது இந்த விஜயத்தின் போது கண் பரி சோதனை செய்யப்பட்ட வர்களில் ஒரு பகுதியினருக்கு கண்ணாடி கள் வழங்கவும்—

காசிப்பிள்ளை வித்தியா லய வறிய பிள்ளைகளில் சிலருக்கு இலவச பற்பசை கள், பற் தூரிகைகள் வழங் கவும்—

வறிய பிள்ளைகளுக்கு உடுப்புகள் வழங்கவும் ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ள தாக நல்லூர் லயன்ஸ் கழ கத் தலைவர் லயன் பா. தவபாலன் தெரிவித்துள் ளார். (இ-6)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்)

ணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்கும் பயணிகள் பல் வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து தொல்லைதவிர்ப்புக் குழு வுக்கு முறைப்பாடுகள் தெரி விக்கப்பட்டுள்ளன என்றும்—

இந்த விவகாரம் திங்க ளன்று நடைபெறும் கூட்டத் தில் விரிவாக ஆராயப்படும் என்றும் — மேலும் தெரிவிக் கப்படுகிறது. (இ-3)


NEW SCIENCE
COLLEGE
JAFFNA.

A/L கணிதம்
2000 A/L
Sat., Sun. 1 p.m.
நுண்கணிதம்
A. RAVI B. Sc.

A/L 99 Day Classes
ஆரம்பம். (சி/4670)

எமது வீடியோ
CD வெளியீடு!

★ புதிய வானம்
★ தங்க மகன்
★ ராணுவ வீரன்
★ காக்கிச் சட்டை
★ ரிக்ஷாக்காரன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (சி/4673)


# 200 பெண் ஊழியர் திடீர் சுகவீனம்

கொழும்பு, ஓக. 28

அளுத்கம ஆடை தயாரிப்பு தொழிற்சாலையில் வேலை செய்யும் 200 பெண் ஊழியர் கள் நேற்று திடீர் சுகவீன மடைந்தனர்.

மதிய உணவு உண்ட இவர் கள் வாந்தி எடுத்து மயக்க மடைந்து வீழ்ந்தனர் என வும்—

இவர்களின் உணவிலோ அல்லது குடித்த நீரிலோ நச்சுத்தன்மை கலந்திருக்க லாம் எனவும் தெரிவிக்கப் பட்டது.

மயக்கமடைந்தவர்களில் 150 பேர் அளுத்கம ஆஸ்பத் திரியிலும், 50 பேர் நாகொட ஆஸ்பத்திரியிலும் அனுமதிக் கப்பட்டனர். (இ-7-21)

# ப. நோ. கூ. ச. கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், பனை தென்னைவள இரண்டாம் படி கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரை யாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10–30 மணிக்கு யாழ் மாவட் டக் கூட்டுறவுச்சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ. கனக சபாபதியின் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெறும். (இ–15)

## நஷ்டஈடு...

(முதலாம் பக்கத் தொடர்)

திபதி கூறியதாக வெளியான செய்திகளில் எதுவித உண் மையும் இல்லை.

இவ்வாறு ஜனாதிபதி செய லகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள் ளதாக நேற்றிரவு ரூபவா ஹினி தெரிவித்தது.

"பிரின்ஸஸ் காஷ் கப்ப லில் பொருள்களை ஏற்றி வந்த கப்பல் தாக்கி அழிக் கப்பட்டதால் நஷ்ட மடைந்த வர்த்தகர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும்என ஜனாதிபதியைச் சந்தித்த ஈ. பி. டி. பி. தூதுக்குழுவி டம் தெரிவிக்கப்பட்டதாக ஈ. பி. டி. பி. வட்டாரங் களை ஆதாரம் காட்டி கடந்த 25 ஆம் திகதிய உத யனில் செய்தி வெளியாகி யிருந்தது.

ஜனாதிபதியுடனான சந் திப்புக்குறித்து மறுநாள் ஈ. பி. டி. பி. யினர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பும் இச் செய்தியை உறுதிப் படுத்தியது என்பது குறிப் பிடத்தக்கது.

அச் செய்திக் குறிப்பில் எம். வி. பிரின் ஸஸ் காஷ் கப்பலில் பொருட்களை அனுப்பி வைத்த வர்த்தகர் களுக்கு கப்பல் அழிக்கப்பட் டதால் ஏற்பட்ட இழப்பு, இதனால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து, ஈ. பி. டி. பி. தூதுக்குழு ஜனாதிபதிக்கு விளக்கி பாதிக்கப்பட்ட வர்த் தகர்களுக்கு நஷ்ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டது.

மேற்படி வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை சரி யான முறையில் மதிப்பிட்டு நஷ்ட ஈடு வழங்க தான் நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி கூறினார்.

என்று தெரிவிக்கப்பட்டி ருந்தது. (இ-9)

# ஒபடகே ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஓக. 28

வடபகுதிப் புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபை யின் தலைவர் ஒபடகே இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து வடபகுதி நிலைமை பற்றி பேச்சுவார்த்தை நடத்தவுள் ளார் எனத்தெரியவருகிறது.

நிவாரண வெட்டு, மற் றும் கப்பல் போக்குவரத்து, அகதிகளின் மீள்குடியமர்வு உட்பட பல்வேறு விடயங் கள் குறித்து அவர் ஜனாதி பதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக் கப்பட்டது. (இ-3-7)

# விசர் நாய் நால்வரை கடித்தது

நெல்லியடி, ஓக. 28

வடமராட்சியிலுள்ள அல் வாய் மாலுசந்திப் பகுதியில் ஒரே நாளில் நால்வரை விசர் நாய் கடித்தது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்தவர்க ளான சின்னையா புவனேந் திரம்(வயது 55), இவரது மக ளான பு. சுகந்தினி(வயது18), மற்றும் கி. சாரங்கன் (வயது 10), செ. சேந்தன் (வயது14) ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

மந்திகை மருத்துவ மனை யில் இவர்கள் சிகிச்சை பெற் றனர்.

இவர்களைக் கடித்த அந்த விசர் நாய், ஐந்துநாள்களின் பின்னர் இறந்து விட்டதா கத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-109)

## தாக்குதல்...

(முதலாம் பக்கம் தொடர்)

குத் தருமாறு நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கேட்டுக் கொண்டதற்கி ணங்க ராஜபக்ஷ மீதான தாக்குதல் சம்பவம் தொடர் பான அறிக்கை அடுத்தவார மளவில் நீதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும்— வெலிக்கடைச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## திறந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்றுக் காலை திறந்த பல்கலைக்கழகத்தினுள் சென்ற பொலீஸார் அங்கு மாணவர்கள் பலரின் வாக்குமூலங்களை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜி. ஐ. பி. குணவர்த்தன இம்மாணவர்களது கைது தொடர் பாகக் கருத்துத் தெரிவிக்கையில், மாணவர்கள் யாவரும் மிரிகான பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருப்ப தாகத் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் —

துப்பாக்கிச் சூடு நடைபெற்ற போது பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மாணவன் தனது சரியான முகவரியை பல்கலைக்கழகத்துக்குக் கொடுக்கவில்லை எனவும் தெரிவித் தார். (இ-7)

## பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்)

ரோந்து சென்ற பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இளை ஞர்கள் சிலரை விசாரித்தனர் எனவும்—

அவ்வேளை அந்த இளைஞர்களில் ஒருவர் பொலீ ஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் எனவும் — இதனை அடுத்து பொலீஸாரும் துப்பாக்கிப் பிர யோகத்தை மேற்கொண்டு அந்த இளைஞர்களைக் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரி யார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 28-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org